2018 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

3. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

வன ஆராய்ச்சி மையம்

***9818—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாது மலையில் வனவியல் கல்லூரி மற்றும் வன ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் வருடம், முதல் கூட்டத் தொடரில் எனக்குப் பேச வாய்ப்பளித்த எனது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லரசை நடத்தி, எல்லோருடைய பாராட்டுகளையும் பெற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) எனது பதிலை அளிக்கிறேன்.*

[2018 ஜனவரி 9

முற்பகல் 10–10

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட நாடானூர் மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய மலைக் கிராமங்களில் சுமார் 25,000 ஹெக்டேர் பரப்பில் வனப் பகுதி அமைந்துள்ளது. இங்கு நெல்லி, உசிலை போன்ற மரங்கள் அதிகமாகவும், மிகச் சிறிய எண்ணிக்கையில் சந்தன மரங்களும் உள்ளன. மலைவாழ் மக்கள் அதிகமாக வசித்து வரும் ஜவ்வாது மலையில், ஜமுனாமரத்தூர் மலைப் பகுதியில் வனத்தில் உள்ள மரங்களில் மரபுசார்ந்த–genetic based–ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள 75,000 ஹெக்டேர் பரப்பில் வன ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் இங்கே வனக் கல்லூரி ஆரம்பிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். வேளாண்மைத் துறையின்கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் வனக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. இங்கு இளம் அறிவியல் வனவியல் B.Sc. (Forestry) பட்டப் படிப்பிற்காக வருடத்திற்கு 60 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேல்நிலைப் படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கலந்தாய்வு–counselling– மூலம் மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் வனவியல் பட்டப் படிப்பு பயில இயங்கி வரும் ஒரே கல்லூரி இதுதான் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் வினாவில் அங்கு வனக் கல்லூரி அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். அதில் தனியாக ஒரு வனக் கல்லூரி–Forest College அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மக்களால் நான் மக்களுக்காகவே நான்” என்று இறுதிமூச்சு உள்ள வரை மக்களின் நலனுக்காகவே அல்லும் பகலும் அயராது பாடுபட்ட நம் இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை

2018 ஜனவரி 9]

வணங்குகிறேன். கழகத்தின் நிறுவனத் தலைவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழகம் முழுவதும் சீரோடும், சிறப்போடும் நடத்திய எங்கள் கொங்கு நாட்டுத் தங்கம், இன்று சேலத்து சிங்கமாக தமிழகம் முழுவதும் உலா வந்துகொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தங்கம் மாண்புமிகு தமிழகத்தினுடைய ஆற்றல்மிக்க முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், தென் பாண்டிச் சீமை நமக்களித்த ஜல்லிக்கட்டு நாயகன், போடி தந்த பொதிகைத் தென்றல், மாண்புமிகு துணை முதல்வர் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இங்கே பாருங்கள்,* (குறுக்கீடுகள்) *அமைதி; அமைதி. ஏற்கெனவே இதுசம்பந்தமாக நான் நிறைய* rulings *கொடுத்திருக்கிறேன். திரும்பத் திரும்பப் பேசாதீர்கள். நீங்கள் பேசும்போது உங்கள் தலைவர்களைப் பாராட்டிப் பேசுகிறீர்கள்.* (குறுக்கீடுகள்) *சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் பேசும்போது உங்கள் தலைவர்களைப் பாராட்டிப் பேசுகிறீர்கள். அதுபோன்று அவர்களுடைய தலைவர்களை அவர்கள் பாராட்டிப் பேசுகிறார்கள்.* (குறுக்கீடுகள்) *இவ்வாறு நடந்துகொள்வது நியாயம் இல்லை; உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதியில் சுமார் 50,000 ஹெக்டேரில் வனப் பரப்பு அமைந்துள்ளது. இங்கு ஏற்கெனவே வன ஆராய்ச்சி மையமும் அமைந்துள்ளது. மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மறுபரிசீலனை செய்து, வனவியல் கல்லூரி அமைத்துத் தர ஆவன செய்வாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் முதல் கேள்விக்கு சரியான விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் தனியாக ஒரு மனுவைக் கொடுத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலையில் வனத் துறை சார்பில் ஒரு மேல்நிலைப் பள்ளியும், 3 நடுநிலைப் பள்ளிகளும், 2 ஆரம்பப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. அதில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, பெண்களுக்கென தனியாக அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்துத் தர அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் குறிப்பிட்ட கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் ஜமுனாமரத்தூர் மேல்நிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, கோவிலூர் நடுநிலைப் பள்ளி, வீரப்பனூர் நடுநிலைப் பள்ளி, கோமுட்டேரி தொடக்கப் பள்ளி, அத்திப்பட்டு தொடக்கப் பள்ளி ஆகிய 6 பள்ளிகளில் ஏறத்தாழ 1,672 மாணவ–மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். அங்கே ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் தனித்தனியாகப் பள்ளிகள் நடத்த அரசு*

2018 ஜனவரி 9]

முன்வருமா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ஜமுனாமரத்தூர் மேல்நிலைப் பள்ளியில் 562 மாணவர்களும், 412 மாணவிகளும் பயின்று வருகிறார்கள். இப்பள்ளியை ஆண், பெண் என இரு பாலருக்கும் தனித்தனியே பிரித்து நடத்த வேண்டுமெனில், பிரிக்கப்படும் பள்ளிகளுக்கென தேவைப்படும் நிதியினை ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் வரும் பழங்குடியினர் நல வாரியம் வழங்க வேண்டும். மேலும், ஒரு பள்ளியை இரு பாலருக்கும் எனத் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமெனில், பள்ளிக் கல்வித் துறையினுடைய அனுமதி உரிய வழிமுறைப்படி பெற வேண்டும். எனவே, இது தொடர்பாக ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையினைக் கலந்தாலோசித்து, உறுப்பினரின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுக்கு அதிக வருமானம் தந்த சந்தன மரங்கள் ஜவ்வாது மலையிலே அதிகமாக இருந்தன. சுமார் 12 ஆண்டுக் காலமாக மரங்களே வளர்க்கப்படாமல் உள்ளதால், அந்த மலையிலே வளரும் மரங்கள்மூலம் அதிக வருமானம் வந்த தமிழக அரசுக்கு, இன்றைக்கு வருமானம் வராத நிலை இருக்கிறது. ஆகவே, வன ஆராய்ச்சி மையத்தின் மூலமாக அங்கே சந்தன மரக் கன்றுகளை வளர்க்க வேண்டும். இன்றைக்கு ஆந்திராவிலே செம்மரங்கள் அதிக அளவில் வளர்க்கப்பட்டு, அதிக வருவாய் அரசுக்கு வருகிறது. அப்படிப்பட்ட செம்மரங்களையும் வளர்க்க வேண்டும். பல்வேறு காடுகளில் இன்றைக்கும் கலாச் செடிகள் போன்றவைதான் இருக்கிறதே தவிர, மரங்கள் அதிக அளவு வளர்க்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, வன ஆராய்ச்சி மையம் அதிலே தலையிட்டு, அதிகளவு மரங்களை உற்பத்தி செய்து, அதன்மூலம் தமிழகத்திலே நல்ல மழைப் பொழிவைப் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா? அரசுக்கு வருமானம் வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சந்தன மரங்களை வளர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, நீண்ட காலமாக இருக்கின்ற சந்தன மரங்களின்* stocks*–களை* global tender *மூலமாக ஏலம் விடுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, அதன் மூலமாக அரசுக்கு வருவாய் வரக்கூடிய செயலை எங்கள் துறை தற்போது மேற்கொண்டிருக்கிறது. விரைவில் அதற்கான அறிவிப்புகள் வரும்; அதுகுறித்த விவரம் எல்லோருக்கும் தெரியவரும்போது, அவருக்கும் தெரியவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மற்ற இடங்களிலும் சந்தன மரங்களை வளர்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுபோன்ற நடவடிக்கை ஏற்கெனவே நடந்துகொண்டிருக்கிறது. செம்மரங்களைப் பொறுத்தவரையில், எங்கெங்கு வாய்ப்பு*–potential–*இருக்கின்றதோ, அங்கெல்லாம் அவற்றை வளர்ப்பதற்குரிய சூழ்நிலையை வனத் துறை மேற்கொண்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதி, அதேபோல, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, ஓசூர் சட்டமன்றத் தொகுதி ஆகிய மூன்று தொகுதிகளிலும் யானைகள் பிரச்சினை அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தால், விவசாயிகளின் பயிர்கள் சேதமடைந்தும், உயிரிழப்புகள் ஏற்படுவதுமான சூழ்நிலை அதிகமாக இருக்கின்றது. இதுதொடர்பாக அரசு எந்த நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. ஆகவே, இந்த நிலை தொடர்ந்தால், கண்டிப்பாக விவசாயிகளின் வாழ்வாதாரம் மிகவும் மோசமடையக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே, இனிமேலாவது அரசு இதிலே கவனம் செலுத்தி, அங்கே யானைகளின் நடமாட்டத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

2018 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் யானைகள் நடமாட்டத்தால் பாதிப்பு இருக்கின்றது என்ற செய்தியை அவர் சொல்லியிருக்கின்றார். இதற்கு முன்பாக மாண்புமிகு அமைச்சர் திரு. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் அவர்களும் இதுகுறித்துத் தெரிவித்து, அங்கு ஏற்கெனவே வனத் துறை அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்திருக்கிறோம். அங்கு யானைகளின் நடமாட்டத்தைத் தடுப்பதற்கு அகழிகள் வெட்டி, தற்சமயம் அங்கு அப்படியொரு நிலை இல்லை என்கின்ற செய்தியை மாண்புமிகு அமைச்சர் திரு. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்களும் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருப்பதை வைத்து, உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை சொல்லி, விரைவில் அதைத் தடுப்பதற்குரிய சூழ்நிலை உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய அன்பான வேண்டுகோள். என்னை விளித்துப் பேசுகின்றபோது, தயவு செய்து புகழ்ந்துரைக்க வேண்டாமென்றும், அதைத் தவிர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் கூறுகின்ற அத்தனை பெருமைகளுக்கும், புகழுக்கும் ஏற்றவர், நம்மையெல்லாம் இந்த அளவுக்கு ஆளாக்கிச் சென்றிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைப் பணிவோடு தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.* (மேசையைத் தட்டும் ஒலி)

[2018 ஜனவரி 9

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடகாடு ஊராட்சி என்பது மலைப் பகுதி. அங்கே பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுக்கோம்பை செல்லும் பகுதிகளில் மலை ஜாதி மக்கள் அதிகமாக, சுமார் 600, 700 பேர் வசித்து வருகிறார்கள். 2006–2011–ல் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அந்த மலைப் பகுதிக்கு வனத் துறையின் மூலமாகத் தார்ச்சாலை அமைத்துத் தரப்பட்டது. அந்தச் சாலை இப்போது மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, அந்த மலை ஜாதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணமாக சென்ற முறை கேட்டேன். இந்த முறை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் வனத் துறை மூலமாக அந்தச் சாலையை அமைக்கும் வகையில் போதுமான நிதியை ஒதுக்கி, அதை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் நான் சார்ந்திருக்கிற திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஏற்கெனவே இங்கே அந்தக் கேள்வியை எழுப்பியதனால் நாங்கள் அங்கே நேரடியாகச் சென்று பார்வையிட்டிருக்கின்றோம். நிதிநிலையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*